**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் டிசம்பர் மாதம் (31.12.2019) ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 11/2019 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.785,பதிவு செய்யப்பட்டது**

.

**பொருள்.2**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-8 இல் அமைந்துள்ள காந்திஜி பூங்காவில் உள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டு குத்தகை காலம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலம் வரை 2019-2020 முதல் 2021-2022 வரை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு உரிமைக்குரல் செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை ரூ.14,000/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.3015/2019/அ2)**

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.786,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-13ல் உள்ள நகராட்சி மேல்நிலை தொட்டிக்கு NH சாலையிலிருந்து அனுகு சாலை அமைக்க நகர்மன்ற தீர்மான எண்-208 நாள் 30.11.2017ல் ரூ.9,50,000/-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்-324 நாள் 20.04.2018ல் குறைந்த விலைவிகிதம் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சபீர்அலி அவர்களின் ஒப்பந்தபுள்ளி நகர்மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு 04.05.2018ஆம் நாள் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி அனுகுசாலை அமைக்கப்பட உள்ள இடமானது மழைநீர் வரக்கூடிய ஒழுகால் பாதையாக உள்ளது. அதில் பேவர் பிளாக் சாலை அமைக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே அதே மதிப்பீட்டுத்தொகையில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.சபீர்அலி அவர்களின் மூலம் வார்டு எண்-16ல் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் முன்புறமுள்ள நுழைவு வாயில் முதல் காவலர் அறைவரை பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:2861/2017/இ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.787,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2018-19ன் கீழ் 5 TPD கொள்ளளவு கொண்ட நுன் உரம் செயலாக்க மையம் அமைக்க ரூ.68.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு ,ஒப்பந்தபுள்ளிகள் பெற்று குறைந்த விலைவிகிதம் கொடுத்திருந்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டது.மேற்படி பணியினை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட ராஜா கினற்றுக்கு அருகிலுள்ள இடத்தில் பணியினை மேற்கொள்ள செல்லும் போது அப்பகுதியின் அருகில் அமைந்துள்ள காந்திகிராமம் பகுதியினை சேர்ந்த பொதுமக்கள் ராஜாக்கினறு பகுதியில் நுன் உரம் செயலாக்க மையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் வரை சென்றனர். ஆகவே நாளது தேதி வரை மேற்படி பணியினை மேற்கொள்ள இயலவில்லை. இந்நிலையில் 13.12.2019 ஆம் நாளன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் தள ஆய்வு மேற்கொள்ளபட்டது. மேற்படி தள ஆய்வின் போது விரைவில் மாற்று இடத்தினை தேர்வு செய்து உடனடியாக நுன் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு நிர்வாக மண்டல

இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் ஆகியோர்களால் அறிவுறுத்தப்பட்டதின்படி இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தை வளாகத்தினுள் 5 TPD கொள்ளளவுள்ள நுன் உரம் செயலாக்க மையம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:945/2018/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.788,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-8 போர்டு ஸ்கூல் தெருவில் கோட்டைமேட்டு தெரு சந்திப்பு பாலத்திற்கு முன் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.1,60,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **( ந.க.எண்:3905/2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.789,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சியில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க IUDM 2018-19ன் கீழ் .ரூ.215.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மண்டல செயற்பொறியாளருடன் 13.12.2019ஆம் நாளன்று தள ஆய்வு மேற்கொண்ட போது மேற்படி கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை ஏற்கனவே உள்ள குப்பைகளை அகற்றிவிட்டு உடனடியாக பணியினை துவக்குமாறு உத்திரவிடப்பட்டது. அதன்படி மேற்படி குப்பைகளை அகற்றுவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.9,80,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்:                /2019/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.790,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சியில் 2011-12 மற்றும் 2012-13 நிதி ஆண்டுகளில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள் பொதுநிதி மற்றும் திட்ட நிதிகளின் கீழ் செய்து முடித்த பணிகளுக்கு பட்டியல் பெறும் போது பட்டியலில் பிடித்தம் செய்த (FSD) கூடுதல் வைப்பு தொகை மற்றும் பணிகளுக்கு செலுத்திய (EMD) முன் வைப்பு தொகைகளை திரும்ப கீழ்கண்டவாறு உள்ளவற்றை வழங்குமாறு 22.10.2019 ஆம் நாளன்று விண்ணப்பம் கொடுத்துள்ளார்.

| வ.எண் | நிதியாண்டு | தொகை(ரூ.) |
|---|---|---|
| 1. | 2011-12 | 5000 |
| 2. | 2012-13 | 74150 |
| | மொத்தம் | 79,150/- |

மேற்படி தொகையானது காலங்கடந்த வைப்புத்தொகை ஆகும் மேற்படி பதிவுகள் இந்நகராட்சி காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேடு 2019–20ல் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலே கண்ட பணிகளின் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவையில் இல்லை எனவே மேற்படி (EMD) தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்த (FSD) தொகை ரூ.79,150/-ஐ ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்:1905/2019/இ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.791,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகம் மற்றும் DBC பணியாளர்கள் ஆகியோரின் மாத ஊதியத்தில் 04/2015 முதல் 01/2019 முடிய மற்றும் 05/2015 முதல் 10/2018 முடிய உள்ள காலங்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் நகராட்சியின் பங்களிப்பு தொகையினை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர், மதுரை அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத வகையில் மேற்கண்ட காலங்களுக்கு ரூ.20,82,394/—யை செலுத்தக்கோரி 15.03.2019ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. DBC பணியாளர்களுக்கு 2015 முதல் 2019 ஜனவரி வரை உள்ள காலங்களுக்கு ரூ.10,75,261/—யை செலுத்தப்பட வேண்டும். அதன்படி 16.04.2019 மற்றும் 13.11.2019 ஆகிய தேதிகளில் ரூ.10,00,000/—யை காசோலை மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மீதம் உள்ள தொகையான ரூ.75,261/—யை காசோலை மூலம் செலுத்தும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.2055/2018/பி1)

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.792,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட குமுளியில் உள்ள அரசு போக்குவரத்து கழக பணிமனைக்கு சொந்தமான சர்வே எண்.3041-ல் உள்ள 1.07 ஏக்கர் நிலத்தில் கூடலூர் நகராட்சி மூலம் பேருந்து நிலையம் அமைக்க உள்ளதால் அவ்விடத்தில் உள்ள பழைய பணிமனை கட்டடங்களுக்கு மறு மதிப்பீடு செய்து வழங்குவதற்கு உரிய சேவை கட்டணம் ரூ.4,075/—ஐ பொது பணித்துறைக்கு செலுத்துமாறு செயற் பொறியாளர், பொ.ப.து, கட்டடம் (கா&பா) கோட்டம், தேனி அவர்களின் அலுவலக க.எண்-236/வா.பா/கோ.78-1/2019 நாள்.19.12.2019-ன்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது அதன்படி ரூ.4075/-ஐ இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் திரு.பா.முருகன் அவர்கள் மூலம் அரசு கருவூலத்தில் கருவூல செலுத்து சீட்டின் வாயிலாக செலுத்தப்பட்ட மேற்படி தொகை ரூ.4075/-ஐ திரு.பா.முருகன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.240/2012/அ3)

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.793,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் **13.12.2019**ல் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **30.12.2019** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **( ந.க.எண்: /2019/இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்.10ல் அமைந்துள்ள | 9.80 | திரு.ஆர்.பரமானந்தன் | 1.00% | — |

| | | | | |
|---|---|---|---|---|
| உரக்கிடங்கினுள் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்க தேவையான அளவிற்கு உள்ள குப்பைகளை அகற்றுதல். | | திரு.கே.வனராஜ் | – | 1.50% |

**அலுவலகக் குறிப்பு : –**

1) வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட **1.00%** குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.ஆர்.பரமானந்தன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.794,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.11**

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள் தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில் உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தள தொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாக திறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களை அழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ கப்,தேங்காய் ஓடு, பழைய பிளாஸ்டிக் பைகள், டயர்களை அப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்குநோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின்படி 39 DBC பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி 25% சேர்த்து ரூ.260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜுலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 –இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படியும், சேமநலநிதி 25% சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ.260 வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 வரை உரிய EPF செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேற்காணும் டெங்கு களப் பணிகளை ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 வரையிலான 3 மாதங்களுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் (2019–20) செயல்முறை உத்திரவின்படி தினக்கூலி அடிப்படையில் 39 நபர்களை பணியமர்த்தி நகர்மன்றத் தீர்மான எண்:674 நாள் 30.08.19 மற்றும் நகர்மன்றத் தீர்மான எண்:697 நாள் 30.09.19 அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஜனவரி 2020 முதல் மார்ச்–2020 வரையிலான காலத்திற்கு 39 டெங்கு களப்பணியாளர்களை பணியமர்த்திட ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

1) நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 217 வீதம் (ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 )

| | | | |
|---|---|---|---|
| | (91* 217 * 39 ) | = ரூ | 770133 |
| 2) | தொழிலாளர் சேம நல நிதி (13.15 %) | = ரூ | 101272 |
| 3) | தொழிலாளர் ESI (4.75%) | = ரூ | 36581 |
| 4) | தொழிலாளர் LIC (50* 39* 3) | = ரூ | 5850 |
| 5) | நிர்வாக செலவு 5% | = ரூ | 38507 |

-----------

**மொத்தம்** ரூ 9,52,343

------------

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 3 மாதங்களுக்கு ( ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 ) உத்தேச செலவினம் ரூ 10,00,000/– ஐ பொது சுகாதார அவசர அவசியம் கருதி, தனியார் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.795,அனுமதிக்கப்பட்டது.**
**பொருள்.12**

தேனி மாவட்டம், கூடலூர் நகராட்சியின் 2019-2020ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.796,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

இந்நகராட்சி தனி அலுவலர் அவர்களின் 03.12.2019 ஆம் தேதிய முன் அனுமதியில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள 26.12.2019 ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில் ) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விடக் குறைவு | மதிப்பீட்டை விட அதிகம் |
| 1. | இந்நககாட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான 3 மாதங்களுக்கு 39 டெங்கு களப்பணியாளர்களை டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ள பணியாளர்கள் பணியமர்த்தல் . | 10.00 | எக்சல் நீட் அன்ட் டைடி ஏஜென்ஸி, மதுரை. | – | 6.21 % |
| 2. | | | க்ளீன் கேர் சர்வீஸ், மதுரை. | – | 4.72 % |

**அலுவலகக்குறிப்பு:**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டினை விட கூடுதலான விலை விகிதத்தில் வரப்பெற்றுள்ளது. மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதல் மதிப்பீட்டினை விட 4.72% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள க்ளீன் கேர் சர்வீஸ் சென்டர், மதுரை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க எண்3655/2019/எச்1).**

**தீர்மான எண்.797,அங்கீகரிக்கப்பட்டது.**